**ஆசிரியர் வைப்பு நிதி சந்தாதாரர்கள் கவனத்திற்கு:**

ஊராட்சி ஒன்றியம், நகராட்சி தொடக்க மற்றும் நடு நிலை பள்ளிகளில் பணிபுரியும் சந்தாதாரர்கள் தங்களுடைய 2014 - 2015 ஆண்டிற்கான வருடாந்திர கணக்கு அறிக்கையை இந்த அலுவலுகத்தின் இணைய தளமான "www.agae.tn.nic.in" என்ற முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தங்களது TPF கணக்கு எண்ணை உள்ளே புகுவதற்கான (Log-in) அடையாள எண்ணாகவும், பிறந்த தேதியினை DD/MM/YYYY என்ற முறையில் கடவு சொல்லாகவும் (Password) பயன்படுத்தி கொள்ளவும்.

150000 முதல் 200000 வரையிலான TPF கணக்கு எண்ணை உள்ள சந்தாதாரர்கள் " MTPF " என்ற பின்னொட்டையை (SUFFIX ) தேர்வு செய்யவும்.

500000 முதல் 700000 வரையிலான TPF கணக்கு எண்ணை உள்ள சந்தாதாரர்கள் " PTPF" என்ற பின்னொட்டையை (SUFFIX) தேர்வு செய்யவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறைபாடுகள் ஏதேனும் தங்களது ஆண்டு கணக்கு அறிக்கையில் கண்டறிந்தால் உடனடியாக தகுந்த ஆவணங்களுடன் தங்கள் பணம் பெற்று வழங்கும் அதிகாரி (DDO) மூலமாக இந்த அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

1. ஆரம்ப இருப்பு (OPENING BALANCE) குறைபாடு - உள்ளாட்சி நிதி தணிக்கையின் சான்றிடப்பட்ட இருப்பு நகல்.
2. விடுபட்ட முன் பணம் / பகுதி இறுதி கடன் / தவறான கடன் பதிவு - ஒப்புதல் ஆணை, கருவூல அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வவுச்சர் நம்பர், டோக்கன் நம்பர், காசாக்கப்பட்ட நாள், இடம், கணக்குத்தலைப்பு ஆகிய விவரங்களுடன்.
3. விடுபட்ட சந்தா தொகை / தவறாக பதிவு செய்யப்பட்ட சந்தா தொகை - SCHEDULE நகல், கருவூல அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வவுச்சர் நம்பர், டோக்கன் நம்பர், காசாக்கப்பட்ட நாள் இடம், கணக்கு தலைப்பு, ஆகிய விவரங்களுடன்.

**பெயர்/பிறந்த தேதியில் மாற்றம்** : பெயர் பிறந்த தேதிக்கு சான்றாக பணிப்பதிவேடு புத்தகத்தின் ( SERVICE BOOK) முதல் பக்கத்தின் சான்றிடப்பட்ட (ATTESTED ) நகல்.

**கணக்கு எண் மாற்றம்** : சரியான எண்ணிற்கான அரசு தகவல் மையத்தினால் வழங்கப்பட்ட எண் ஒதுக்கீடு ஆணையின் நகல்.

மேலும், ஊராட்சி ஒன்றிய பள்ளி சந்தாதாரர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்களான 500000 முதல் 700000 வரை உள்ள எண்கள் "PTPF" என்ற பின்னொட்டுடனும் (suffix) மற்றும் நகராட்சி பள்ளி சந்தாதாரர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்களான 150000 முதல் 200000 வரை உள்ள எண்கள் "MTPF" என்ற பின்னொட்டுடனும் (suffix) அப்படியே பயன்பாட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஒரு சந்தாதாரர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நகராட்சிக்கோ அல்லது நகராட்சியிலிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கோ மாறுதல் ஆனாலும் அவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட கணக்கு எண்ணையே உபயோக படுத்திக்கொள்ளலாம் . புதிய கணக்கு எண் பெறுவதற்கு விண்ணப்பிக்க தேவையில்லை.

**அரசு உதவி பெரும் பள்ளி கணக்கு எண்**:

அரசு உதவி பெரும் பள்ளிகளில் பணிபுரிவோரின் TPF கணக்கினைப் பராமரிக்கும் பொறுப்பு இந்த அலுவலகத்திற்கு ஒப்படைக்க படவில்லை. எனவே அரசு உதவி பெறும் பள்ளிக்கணக்கு ASTPF எண்களான 200000 முதல் 300000 வரையிலான கணக்கு எண் கொண்ட சந்தாதாரர்கள் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் பணிபுரிந்திருந்தாலும் அவர்களது கணக்கு அறிக்கை இந்த இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. புதிய கணக்கு எண் பெறுவதற்கு ஏதுவாக அவர்கள் உடனடியாக மாநில கணக்காயர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

TPF சந்தாதாரர்கள் இந்த அலுவலக இணைய தளத்தில் (www.agae.tn.nic.in) தங்கள் அலைப்பேசி எண்ணை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொறுப்பு துறப்பு :**

கணக்கு அறிக்கையில் பதிவுசெய்துகாட்டடப்பட்டுள்ள ஆரம்ப இருப்பு (opening balance), தொடக்க கல்வி இயக்குனர் / பணம் பெற்று வழங்கும் அதிகாரி ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட உள்ளாட்சி நிதி தணிக்கை அதிகாரியால் சான்றிடப்பட்ட இருப்பு நகலின் அடிப்படையில் பதிவாக்கப்பட்டது.